1975 அக்டோபர் 28]

திரு. என். கே. பழனிசாமி: தலைவரவர்களே, இப்போது கோயம்புத்தூரை கார்ப்பரேஷனுக மாற்றியிருக்கிருர்கள். ஆகவே இந்தத் திட்டம் மிகவும் அவசியமும், அவசரமுமாக இருக்கிறது. லாரிப் போக்குவரத்து, பஸ் போக்குவரத்து இவைகளை எந்தெந்த முறையில் மாற்றியமைக்க வேண்டுமென்று இந்தக் குழு சர்க்காருக்கு ஆலோசனை சொல்லியிருக்கிறதா? அதன் விவரம் என்னவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, எதையும் மாற்றுவதற்கு முன்னலே, உண்மையான நிலவரம் என்ன என்பதைப் பற்றிய புள்ளி விவரத்தைச் சேகரிக்கவேண்டும். இப்படிப் புள்ளி விவரங்களை ஏராளமாகச் சேகரித்த பின்னல் புள்ளி விவரங்களை கம்யூட்டருக்குக் கொடுத்து இவைகளை ஒழுங்குபடுத்திப் போக்குவரத்து நெரிசல் எந்தப் பகுதியில் வளரும், எங்கே வளருவதற்கு வாய்ப்பு இருக்கிறது, எங்கே வாய்ப்பாக இருக்கும், என்ன இடத்தில் என்ன மாற்றம் செய்ய வேண்டுமென்று விரிவாக ஆராயவேண்டும். புள்ளிவிவரங்களை தொகுக்கிற பணி முடிந்த பிறகு ஆராயவேண்டிய கட்டாயம் இருக்கிறது. இது ஒரு ஆண்டு ஆனலும் ஆகும். மாநகராட்சியாக இருந்தாலும், வெறும் நகராட்சியாக இருந்தாலும் இந்தக் கடமை தனிக் கடமை. இந்தக் கடமை முறைப்படி நடக்கும்.

குத்தகை தள்ளுபடி மாற்றம் குறித்த வழக்குகள்

*97 வின—திரு. ச. சங்குமுத்து தேவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1970 முதல் 1974 வரையான காலண்டர் ஆண்டுகளில், திருநெல்வேலி மாவட்டத்தில் தாசில்தார் அவர்களிடம் குத்தகைத் தள்ளுபடி அல்லது ரெவிஷன் போட்டு மனு கொடுத்த வழக்குகள் இதுவரை எத்தனை முடிவடையாமல் இருக்கிறது?

(இ) காலதாமதத்தைத் தவிர்க்க அரசு எடுத்துக்கொண்ட முயற்சி யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) பேரவை முன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

@ 143–145-ம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

(இ) திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் சம்பந்தப்பட்ட வட்ட ஆட்சியர்களுக்கு, நிலுவையிலுள்ள கோப்புகளை விரைவில் முடிவு செய்யுமாறு உத்தரவிட்டுள்ளார். திடீர் சோதனைக்குச் செல்லும்போது இது சம்பந்தப்பட்ட கோப்புகளையும் பரிசீலிக்கு மாறு கோட்ட ஆட்சியர்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வி எண்கள் 95, 96 ஒத்திவைக்கப்படுகின்றன.

திரு. ச. சங்குமுத்து தேவர் : தலைவரவர்களே, இது மாதிரிப் போடக் கூடிய மனுக்களை விரைவில் முடிப்பதற்கு அரசு மேற் கொண்ட நடவடிக்கைகள் என்ன? குறிப்பாக, 1971 ஆம் ஆண்டிலே போடப்பட்ட மனுக்கள் 11, 1972-ம் ஆண்டிலே 4, 1973 ஆம் ஆண்டிலே 3, 1974 ஆம் ஆண்டிலே 14 ஆகிய இந்த மனுக்களெல்லாம் கால தாமதம் ஆவதற்குக் காரணம் என்ன, அமைச்சரவர்கள் விளக்குவார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதற்கு மூலக் கேள்வியிலேயே பதில் சொன்னேன். 1970 இலே 50 மனுக்களில் 4 மனுக்கள் தான் நிலுவையில் உள்ளன.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, இந்த நிலை திருநெல்வேலி மாவட்டத்தில் மாத்திரமல்ல. எல்லா மாவட்டங் களிலும் இவைகள் நடந்து கொண்டு வருகின்றன. இப்படி வறட்சி ஏற்பட்டவுடனே நிலச் சொந்தக்காரர்களுக்கு நில வரி, மற்ற வரிகளெல்லாம் தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறதே, கடனையெல்லாம் ஒத்தி வைக்கிறோமே, சாகுபடி செய்யக் கூடிய குத்தகையையும் வறட்சி காரணமாகத் தள்ளுபடி செய்யக் கூடிய நடவடிக்கைகள் எடுத்தால் என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, வறட்சியின் காரணமாக விளையாவிட்டால் வாரம் கொடுக்கவேண்டியதில்லை என்று சட்டத்தில் இருக்கிறது.

திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம்

*98. வினா—**திரு. எம். முத்தையா :** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—